முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.626/2015

தேதி : 29-08-2025

(வா.சா.1) – திரு.செல்வராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 1 அண்ணன் ரத்னா, 1 அக்கா மேரி. என் தந்தையின் இறப்பை சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தையின் வாரிசு சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாக்கியம் பிள்ளை என்பவரின் பெயரில் தான் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் உள்ளது என்றால் சரிதான். திருமண ஒப்பந்தத்தில் செல்லாராஜ் என்பவரின் கையெழுத்து உள்ளது என்றும், செல்வராஜ் என்று இல்லை என்றால் சரிதான், ஆனால் நான் தான் கையெழுத்து போட்டேன். எழுத படிக்க எனக்கு தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவேன். எனக்கு ராஜு என்ற பெயர் உள்ளது என்றால் இல்லை. என் தந்தைக்கு ராஜு என்ற மகன் உள்ளதா என்றால் இல்லை. பட்டா ராசு பெயரில் இருப்பதால் நான் ராஜு என்று சொல்லி ஜெயசீலப்பாண்டியன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை.

2. பொது அதிகார ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்ட குண்டுப்பட்டி கூக்காலை சார்ந்த மாயத்தேவர், சுப்ரமணியன் என்பவர்கள் உள்ளார்களா என்றால் அப்படிப்பட்டவர்கள் இல்லை. ராஜு என்பவர் எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தை பார்த்துள்ளேனா அல்லது படித்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் என் சகோதரர் சகோதரிக்கு பங்கு உள்ளதா என்றால் இருந்தது, ஆனால் அவர்களிடம் ஆவணம் எழுதி வாங்கிவிட்டேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல செய்யலாம். அவர்களை விசாரிக்க தயாரா என்றால் தயார். நான் பாக்கியம்பிள்ளை மகன் செல்வராஜ் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யாததால் நான் அவருடைய பிள்ளை அல்ல என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான், ஆனால் அவை என்னிடம் உ ள்ளது, தாக்கல் செய்ய தயார். என் பெயரை பயன்படுத்தி குரியன் என்பவர் ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் பதிந்துள்ளார் என்று சொல்லி குற்றவியல் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நிலஅபகரிப்பு பிரிவு திண்டுக்கல்லில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடமிருந்து பண பறிப்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.